2010 மே 12] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

கடிதம் என்ற ஒரு செய்தி இன்றைய முரசொலி பத்திரிகையிலே வந்திருக்கின்றது. அது குறித்து நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனையைக் கொடுத்திருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். நீங்கள் இன்றைக்குக் காலையில் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய பரிசீலனையில் இருக்கிறது. நான் அதைப் படித்துப் பார்த்து அதற்குப் பிறகு முடிவெடுக்கிறேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இன்று காலையில்தான் பேப்பரில் வந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இன்றைக்குக் காலையில் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நாளைக்கு எடுத்துக்கொள்கிறீர்களா?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: சபையில் raise பண்ணலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபை ஆரம்பித்த பிறகு, நீங்கள் 9-58-க்கு என்னிடம் அறிவிப்புக் கொடுத்துவிட்டு, உரிமை மீறல் என்றால் என்ன அர்த்தம்? நான் படித்துப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) Raise பண்ணினால், அதற்குப் பதில் சொல்வதற்கு அவர்கள் தயாராக இருக்க வேண்டுமல்லவா? They must be given time. நீங்கள் 9-58-க்கு என்னிடம் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அதைப் படித்துப் பார்க்க வேண்டும். 9-00 மணிக்கு முன்பாகக் கொடுக்க வேண்டும். என்னிடம் கொடுப்பதாக இருந்தால், 9 மணிக்குள் கொடுக்க வேண்டும். 9-58-க்கு என்னிடம் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறீர்கள். அதை இப்போதே எடுங்கள் என்றால் என்ன அர்த்தம்? இது முறையா? படித்துப் பார்த்து, அதற்குப் பிறகுதான் பரிசீலனை செய்ய முடியும். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் எல்லாம் கொஞ்சம் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பேசும்போது நீங்கள், மற்றவர்கள் எழுந்து நின்றால், அது முறையில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்மீது ஓர் உரிமைப் பிரச்சினையை

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கொண்டு வந்து தங்களிடத்திலே கொடுத்திருப்பதாகவும், அது முன்கூட்டியே தரப்படவில்லை; உரிய நேரத்தில் தரப்படவில்லை; இப்போதுதான் சில நிமிடங்களுக்கு முன்பு தரப்பட்டது; எனவே, அது ஆய்விலே இருக்கிறது; பிறகு தீர்ப்புக் கூறப்படும் என்று தாங்கள் சொல்லி இருக்கின்றீர்கள். ஆனால் நான், இங்கே உள்ள உரிமை பிரச்சினைக்கான விதிமுறைகள், சட்ட திட்டங்கள், இவற்றையெல்லாம் தாங்கள் ஆழமாகக் கவனிக்காமல் இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்போதுதான் உரிமைக் குழு கூடும். அந்தக் கூட்டத்திற்கு எனக்கும் அழைப்பு அனுப்பப்படும். இவ்வளவு பெரிய மன்றத்திலே சொல்ல முடியாத, சொல்லாமல் விட்டுப் போன பல விஷயங்களை உரிமைக் குழுவிலே சொல்வதற்கு எனக்கு வாய்ப்பும், வசதியும் ஏற்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-45

ஆகவே தயவுசெய்து, விதிமுறைகளைப் பார்க்காமல், சட்ட திட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல், இந்த அவையில் கடந்த காலத்திலே உரிமைப் பிரச்சினைகளுக்கெல்லாம் என்ன கதி ஏற்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல், இது கருணாநிதிமீது தந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினை என்ற முறையிலே, அதுவும் நம்முடைய அருமை நண்பர் பன்னீர்செல்வம் தந்திருக்கின்ற உரிமைப் பிரச்சினை என்ற முறையில், அந்த உரிமையோடு எடுத்துக்கொண்டு, உரிமைக் குழுவிற்கு அதைத் தாங்கள் விடவேண்டும். உரிமைக் குழுவிற்கு அதை அனுப்பினால், அங்கே நான் அதைப் பற்றி விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெருந்தன்மையோடு *(குறுக்கீடுகள்)* இந்த அவை உரிமை மீறல் பிரச்சினையை இன்று எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிற காரணத்தினால், *(மேசையைத் தட்டும் ஒலி)* பேரவை விதி 226-ன்கீழ் இப்பிரச்சினை குறித்து விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக இப்பிரச்சினையை அவை உரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன். *(குறுக்கீடுகள்)* இனி, அடுத்த பொருளுக்குப் போகலாம். *(குறுக்கீடுகள்)* இதில் விளக்கம் எல்லாம்

2010 மே 12] [பேரவைத் தலைவர்]

தீர்ப்பிற்கு மேலே எதையும் allow பண்ண முடியாது. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அவையில் ஓர் உறுப்பினர் இன்னோர் உறுப்பினர்மீது உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்தால், அவர் கோருவது, இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்பதாகும். அதைப்போலத்தான் இப்போது என்மீது கொண்டு வரப்பட்ட உரிமைப் பிரச்சினையில் எதிர்க்கட்சி கோருவது, இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதாகத்தான் இருக்க முடியும். அதை நானே ஏற்றுக்கொண்டிருக்கிறேன். "உரிமைக் குழுவிற்கு விடக்கூடாது" என்று நான் சொன்னால்தான் விவாதம். உரிமைக் குழுவிற்கு விடவேண்டுமென்று அவர்கள் சொல்வார்கள். "விடக்கூடாது" என்று நான் சொல்வேன். அந்த விவாதம் நடைபெற்று, முடிவில் அவைத் தலைவராகிய தாங்கள் ஒரு தீர்ப்பளிப்பீர்கள். அந்தச் சிரமத்திற்கு இடமில்லாமல், "இந்தப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்புவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை" என்று குறிப்பிட்ட பிறகும், இதிலே வாதம் ஏன் விவாதம் ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் பேரவை விதி 226-ன்கீழ் நான் முடிவு எடுத்ததற்குப் பின்னாலே, இதன்மீது பேசுவதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நான் அடுத்த subject-க்குப் போகிறேன். *(குறுக்கீடுகள்)*

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், தானியங்கி மையக் காவலரால் காவல் துறை துணை ஆய்வாளர் சுடப்பட்டு உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்தில் தானியங்கி பணம் எடுக்கும் மையத்தில் காவல் துறை சார் ஆய்வாளர் துப்பாக்கியால் சுடப்பட்டு உயிரிழந்தது குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார்,

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்). தஞ்சை மாவட்டம், பாபநாசத்திலே . . .

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர், "சர்வாதிகார சபாநாயகர் ஒழிக" என்று கோஷமிட்டனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒழிக' என்று கூச்சலிட்டுக்கொண்டிருக்கின்ற உறுப்பினர்களை அவைத் தலைவர் அவர்கள் name செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. செந்தில் பாலாஜி, திரு. கோ. அரி, திரு. செ.ம. வேலுசாமி, திரு. டி. ஜெயக்குமார், திரு. வி.பி. கலைராஜன், திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் அவையிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் (திரு. எல். ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. க. இராஜேந்திரன் ஆகியோர் தவிர) மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்)

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம், தானியங்கி மையக் காவலரால் காவல் துறை துணை ஆய்வாளர் சுடப்பட்டு உயிரிழந்தது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அ.இ.அ.தி.மு.க. சார்பாகப் பேசுவதற்கு யாரும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

முற்பகல் 10-55

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தஞ்சை மாவட்டம், பாபநாசத்தில் பாரத ஸ்டேட் வங்கிக்குச் சொந்தமான ஒரு தானியங்கி காசு